செ.வெ.எண்: 39/மே நாள்: 21.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இறுதி பயிற்சி வகுப்பில் மது அருந்திவிட்டு குந்தகம் ஏற்படுத்திய மூன்று அலுவலர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், நடைபெற்று முடிந்துள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016-ல், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணியில் ஈடுபட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்காக 12.05.2016 அன்று நடைபெற்ற இறுதிகட்ட பயிற்சி வகுப்பில் மது அருந்திவிட்டு குந்தகம் ஏற்படுத்திய மூன்று அலுவலர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்துள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016-ல், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 301 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக 28 மண்டல அலுவலர்களும், 301 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 918 வாக்குச்சாவடி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, பரமக்குடி கீழ முஸ்லீம் மேல்நிலைப்பள்ளியில் தேர்தல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. 12.05.2016 அன்று நடைபெற்ற இறுதி பயிற்சி வகுப்பின் போது, மல்லனூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றிய திரு.ஜான்தாமஸ், தேளூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றிய திரு.தர்மராஜ், ஓரிக்கோட்டையிலுள்ள செயின்ட் மேரிஸ் நடுநிலைப்பள்ளியில் பணியாற்றிய திரு.ராஜா ஆகியோர் மது அருந்திவிட்டு பயிற்சி வகுப்பிற்கு வந்ததோடு, பயிற்சி வகுப்பினை நடத்த விடாமலும், பிற அலுவலர்களை பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விடாமலும் இடையூறு ஏற்படுத்தியுள்ளனர். மேலும், வகுப்பறையில் வைக்கப்பட்டிருந்த வருகை பதிவேட்டினையும் கிழித்து குந்தகம் ஏற்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (பரமக்குடி சார் ஆட்சியர்) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., அவர்கள், சம்மந்தப்பட்ட மூன்று அலுவலர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள கல்வித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதன்படி, மேற்குறிப்பிட்டுள்ள மூன்று அலுவலர்கள் மீதும் துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக, பரமக்குடி நகர காவல் நிலையத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of People Act) பிரிவுகளின்படி வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் இது சம்மந்தமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

12.05.2016 அன்று நடைபெற்ற சம்பவத்தின் காரணமாக, மேற்குறிப்பிட்டுள்ள மூன்று அலுவலர்களும் நடைபெற்று முடிந்துள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016-ல் எவ்விதமான தேர்தல் பணியிலும் ஈடுபடுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**